உ

முருகா

ஓம் தண்டாயுதபாணி துணை.

திருமுருகன்
பிள்ளைத்தமிழ்த் திரட்டு

சென்னை அறநிலையப் பாதுகாப்புக் கழக ஆணையாளர்

உயர்திரு. A. உத்தண்டராம்பிள்ளை I. A. S.

அவர்கள் முன்னுரையுடன்



பழநி ஸ்ரீதண்டாயுதபாணி சுவாமி

தேவஸ்தான வெளியீடு

1957

ப்பி 2000] [விலை 30 நயா பைசா

த்தகம் சென்னை கிடங்குத் தெரு, ஜவுளி வியாபாரம்,
லசுப்ரமண்யம் கம்பெனியாரால் வெளியிடப்பெற்றது.

டிரஸ்டிகள்

திரு. P. S. K. லக்ஷ்மிபதிராஜு, M. L. A. அவர்கள், தலைவர்.

திரு. V. V. C. R. முருகேச முதலியார் அவர்கள்.

திரு. S. R. ஆறுமுகம், M. P. அவர்கள்.

திரு. A. அருணாசலம் பிள்ளை அவர்கள்.

திரு. P. S. ஸ்ரீனிவாச செட்டியார் அவர்கள்.

K. V. சுப்பையா பிள்ளை, B.A.,
இறைபணியாளர்,
தண்டாயுதபாணி சுவாமி
தேவஸ்தானம், பழநி.

அடியிற்கண்ட புத்தகங்களும், படங்களும் தேவஸ்தானத்தில் கிடைக்கும்—

		ரூ.	ந.பை.
மயில்விடுதூது	...	0	50
முருகன் பாராயணத் திரட்டு	...	0	19
ஆறுமுகப்பெருமான் பாராயணத் திரட்டு	.	0	25
திருமுருகன் பிள்ளைத்தமிழ்த் திரட்டு	...	0	25
தண்டபாணி திரு உருவ படம்	...	0	37
முருகன் திரு உருவ படம்	...	0	31

உ

முருகா

ஓம் தண்டாயுதபாணி துணை

திருமுருகன்
பிள்ளைத்தமிழ்த் திரட்டு

சென்னை அறநிலையப் பாதுகாப்புக் கழக ஆணையாளர்

உயர்திரு. A. உத்தண்டராம்பிள்ளை I. A. S.

அவர்கள் முன்னுரையுடன்



பழநி ஸ்ரீதண்டாயுதபாணி சுவாமி
தேவஸ்தான வெளியீடு
1957

காப்பி 2000]   [விலை 36 நயா பைசா

பதிப்பகம்:
ரத்தினம் (இளை) அச்சகம்
65, திருப்பள்ளி தெரு,
சென்னை-1.

உ

முருகன் துணை.

தமிழ்நாட்டு
அறநிலையப் பாதுகாப்புக் கழக ஆணையாளர்

உயர்திரு. அ. உத்தண்டராம் பிள்ளை, I. A. S. அவர்கள்

வாழ்த்துரை

'சான்றவ ராய்ந்திடத் தக்கவாம் பொருள்
மூன்றுள மறையெலாம் மொழிய நின்றன
ஆன்றதோர் தொல்பதி ஆருயிர்த் தொகை
வான்திகழ் தளையென வகுப்பர் அன்னவே'

—கந்தபுராணம்.

சமயம் என்ற சொல்லுக்கு 'மார்க்கம்' 'வழி' 'நெறி' என்று பொருள்கூறுவர். சமயம் என்பது, நன்றாக அமைக்கப் பட்டது, செய்யப்பட்டது என்னும் பொருள்படும். மக்கள் மாக்களாக வாழாமல் தேவர்களாகப் பேரானந்தப் பெரு வாழ்வு வாழ்வதற்கு உதவி புரிவது சமயம். சைவ சமயம் எவராலும் எக்காலத்திலும் தோற்றுவிக்கப்பட்ட சமயம் அல்ல. அது இறைவனைப் போன்று ஆதி அந்தமில்லாதது. பகுத்தறிவு கொண்டு ஆராய்பவர்க்கு, இம்மையிலும் மறு மையிலும் உயிர்க்கு உறுதி பயக்கும் வகையில், சமய உண் மைகளை விளக்குவது சைவ சித்தாந்த நூல்களே யாகும். இறை, உயிர், தளை என்னும் முப்பொருள்களும் நிலைத்து நிற்பவை. அவற்றுள் தளையாகிய பாசத்தை விலக்கி உயி ராகிய பசுபதியினை அடைய வேண்டுவதே வாழ்க்கையின் லட்சியம். இதையே,

'பற்றுக பற்றற்றான் பற்றினை அப்பற்றைப்
பற்றுக பற்று விடற்கு' என்றும்,

'ஆரா இயற்கை அவா நீப்பின் அந்நிலையே
பேரா இயற்கை தரும்' என்றும்,

'யான் எனது என்னும் செருக்கறுப்பான் வானோர்க்கும்
உயர்ந்த உலகம் புகும்' என்றும்

வள்ளுவர் விளக்கி யுள்ளார்.

இதற்கு முக்கிய சாதனம் இறைவழிபாடு. இறைவன் மக்களுக்காகக் கொண்ட அருட்கோலங்களுள் சிறந்தது முருகன் வடிவம். முருகன் பெருமையைக் குறித்து எழுதுவதாயின் இவ் வாழ்த்துரை மிக விரியும். கலியுக வரதனை முருகப் பெருமான் பொருள் சேர் புகழைக் குறித்து, பண்டைய நாள் தொட்டுப் பலவகைப் பாடல்கள் பாடப்பெற்றுள்ளன. அவற்றுள் பிள்ளைத் தமிழ் என்பதும் ஒன்றாகும்.

இறைவனைக் குழந்தைப் பருவம் உடையவனாகக் கொண்டு, காப்பு, செங்கீரை, தால், சப்பாணி, முத்தம், வருகை, அம்புலி, சிற்றில், சிறுதேர், சிறுபறை எனப் பத்துப் பருவங்களாக அமைத்துச் சந்தப் பாக்களாலும் செந்தமிழ்ப் பாக்களாலும் பருவம் ஒன்றுக்குப் பத்துப் பாடல்களாகப் பாடுவது புலவர் மரபு.

இவ்வண்ணம் புலவர் பெருமக்களால் பாடப்பெற்ற பிள்ளைத் தமிழ்ப் பிரபந்தங்கள் பல உள்ளன. அவற்றுள் தமிழ் நாட்டிலுள்ள முருகப் பெருமான் திருக்கோயில் கொண்டுள்ள பத்துத் திருத்தலங்களிலுள்ள மூர்த்திகளைப் போற்றிப் பரிந்து மகிழ்ந்து பாடியருளிய பத்துப் பிரபந்தங்களைப் பொறுக்கி எடுத்து, ஒவ்வொரு நூலினின்றும் ஒவ்வொரு பருவத்துக்குரிய பகுதியைத் தொகுத்த இந்த

திருமுருகன் பிள்ளைத் தமிழ்த் திரட்டு என்ற அரிய நூலை வெளியிடும் பொறுப்பை ஏற்று இனிது செயலாற்றியவர் குகஸ்ரீ ரசபதி அவர்கள். அப் புலவர்மணி எழுதியுள்ள குறிப்புரைகள் மிகவும் பயனுடையவை. தமிழகத்தின் வடபாலுள்ள திருவிரிஞ்சைத் தெய்வ சிகாமணியின் அபயவரத கரங்களைப் பற்றிக் கூறும் காப்புச் செய்யுளில் தொடக்கமும், தென்பால் திருக்குற்றாலத்தருகே ஓர் குன்றின் மேல் காட்சி அளிக்கும் சிவஞான முத்தி தரு திருமா மலைக் கடவுளிடம், திங்கள் மும்மாரி பொழியச் சேவல் வாழ்க சிறுதேர் உருட்டி யருளே என முடிவும் ஆக இந்நூலை அமைத்திருப்பது, பாராட்டுக்குரிய தோர் சிறப்பியல்பு. புலவர் மணி குகஸ்ரீ ரசபதி அவர்களுக்கு நம் நன்றியும் பாராட்டும் உரியன. இந்நூல், முருகப்பெருமான் அருளை வேண்டுவாருக்குப் பெரிதும் பயன்படும்.

இந்நூலை வெளியிட முன் வந்து உதவியவர்கள், சென்னை ஸ்ரீ பாலசுப்பிரமணியம் கம்பெனியார் அவர்கள். திருப்பதி, பழனி, திருச்செந்தூர், இராமேஸ்வரம், கன்னியாகுமரி, மதுரை முதலிய பல தலங்களில் இறைவன் திருமுன்பு வெள்ளி விளக்குகளை ஏற்றிவைத்து, அவைகள் எப்போதும் சுடர் விட்டெரியவும் வகை செய்திருக்கும் இவர்கள் திருத்தொண்டினைச் சைவ உலகம் பாராட்டக் கடமைப் பட்டுள்ளது. இன்னும் பல துறையிலும் இறைபணி யாற்றி வரும் இக்கம்பெனியார், ஆண்டுதோறும் கந்தசஷ்டிவிழாவை ஒட்டி முருகன் பாமாலைகளைத் தொகுத்துப்பழனியாண்டவன் பெயரால் வெளியிட்டு, அதனின்றும் வரும் தொகையிலிருந்து மீண்டும் பலவகைப் பக்திப் பாடல்களை வெளியிட்டு வருகின்றனர். இந்த ஆண்டு பிள்ளைத் தமிழ்த் திரட்டு ஒன்றை வெளியிடலா மென்று அடியேன் கூறிய யோசனையை அன்புடன் ஏற்று, இவ்வருட் பணியை குகஸ்ரீ ரசபதியவர்கள் முயற்சியால் தொகுத்து,

அன்னாரின் அரிய குறிப்புரையும், ஆசிரியர் வரலாறு, தல வரலாறுகளுடன் வெளியிட்ட அக் கம்பெனியார்க்கு நாமென்றென்றும் நன்றி செலுத்தக் கடமைப் பட்டுள்ளோம். இவர்கள் தொண்டு நிலைத்துத் திகழ்ந்து மக்கட்கு மென்மேலும் பயன்படுமாறு இறைவன் அருள் புரிவாராக.

"ஒல்லும் வகையான் அறவினை ஓவாதே
செல்லும் வாயெல்லாஞ் செயல்".

இந்நூலின் துணைகொண்டு, 'வாழ்த்த வாயும் நினைக்க மட நெஞ்சும் தாழ்த்த சென்னியும் தந்த தலைவனை' வணங்கித் துதித்து, அவன் திருவருட் பேற்றிற்கு உரியராகி உய்தி பெறுவோமாக.

அ. உத்தண்டராமன்,
12—10—57.

1. திருவிரிஞ்சை:

இது, தொண்டை நாட்டுத் தலம். காட்பாடிப் புகை வண்டி நிலயத்தில் இருந்து 8 மைல் ; விரிஞ்சிபுரம் ஸ்டேஷனி லிருந்து 3 மைல் கரபுரம், கரபுரி என்றும் இத்தலத்திற்குப் பெயர் உளது.

எம்பெருமான் திருமுடி எட்டவில்லையே என்று வருந் திய அந்தணச் சிறுவர்க்கு, வீணை கவலே வேண்டா ; அன்புள நீ அபிஷேகம் செய் என்று, தன் வணங்காத் திரு முடியைச் சிவபிரான் வணக்கி நின்ற பதி இது.

சிறக்க சாவித்திரர் சேவிக்க, கண்ணுதல் இறைவர் கயிலாயத்தை அவர்க்குக் காட்டிக் கொடுத்த தலம் இது.

வணிக பக்தர் ஒருவர்க்கு, அமலர் இங்கிருந்து வழித் துணை யாகி வந்தார். இப்படி யெல்லாம் புனித தலபுராணம் புகல்கிறது.

திருமுருகனுக்கு, இங்கு தனித் திருக்கோயில் உளது. தெய்வக் கம்பீரத் திருவுருவம். இங்கு முருகனை உபாசித்து உயர்ந்தோர் பலர். அவர்களுள் ஒருவர், வரகவி ஸ்ரீ மார்க்க சகாய தேவர்.

ஆடிப் பூரத்தன்று, அங்கு மரகதாம்பிகை வழிபாடு நடைபெறும். அன்று இரவில் தேவியை, ஆத்தே ஆத்தே என்று குரல் கொடுத்தாளும் நம் ஆறுமுகப் பெருமான்.

வழித்துணை நாதர் ஆண்டு விழா நிகழ்பொழுது, மார்க்க சகாயரை, ஐயா ஐயா என்று கூவி யழைத்ததாம் குமரவேள்.

திருவோண புண்ணிய தினத்து இரவில், அம்மான் அம்மான் என்று, திருமாலே ஆர்வம் காட்டி விளித்தாளும் நம அத்தன். இப்படி அற்புதமாக அழைத்த ஒலிகளை, அத்தலத்தில் தங்கி அயில் மயில் இறையை ஆராதித் திருந்த அன்புத் தேவர் செவிமடுத்து, இன்புற்றுப் பாடியது இத் திருவிரிஞ்சை முருகன் பிள்ளைத் தமிழ் என்று பேசுகின்றனர் பெரியோர்.

2. திருப்பரங்குன்றம்.

இப்பதி, மதுரைக்குத் தென்மேற்கில் 4 மைல் தூரத்தில் இருக்கிறது. இது ஆறுபடை வீடுகளுள் முதலது. தேவயானையார் திருமணம், நியதி பெற இங்கு நிகழ்ந்தது.

" யாம் இரப்பவை,
பொன்னும் பொருளும் போகமும் அல்ல ;
அருளும் அன்பும் அறனும் என்றிவை "

என்று, வானவரும் தானவரும் கானவரும் பிறரும், அர்ச்சித்தல், நிவேதித்தல், இசைபாடல் செய்து, வந்து வந்து இங்கு நாளும் வழிபடுகின்றனர்.

கண்ணிறைந்த கணவர் வாய்ப்ப, நன்மகப் பேறு சித்திக்க, வீரமணாளர்க்கு வென்றி விளைய ஆராதிக்கின்றார் அரிவையர்.

முருகன்மேல், அவன் ஊர்தியான மயில் யானைகள் மேல், செம்மைக் கொடியான சேவல் மேல், வெற்றி வேலின் மேல், ஆணை யிடுவது கூடாது என்று, அணங்கனார் ஆடவர்க்கு அறிவுறுத்தும் அருமைத் தலம் இது.

சங்க நாதம் செய்யும் சங்க நூற்களுள், எட்டுத் தொகையில் ஒன்றான பரிபாடல், திருப்பரங் குன்றத்தின் பெருமையை இப்படி யெல்லாம் தெரிவிக்கின்றது.

இங்கு எழுந்தருளிய குமரன்மேல், மு. ரா. அருணாசல கவிராயர் பாடிய பிள்ளைத் தமிழ், உள்ளம் அள்ளும் இயற்கை வருணனையும், சொற்செறிவும், ஆழமான அரும் பொருளும் அமைந்தது.

3. திருச்செந்தூர்

இது இரண்டாவது படைவீடு. சீரலைவாய், செந்தில், செயந்திபுரம், கந்தமாதனம், சந்தனசலம் என்ற பெயர்களும் இதற்கு உண்டு. இங்கு, விமல உற்சவர்க்கு விசேடமகிமை. அவரை ஒரு காலத்தில் டச்சுக்காரர் எடுத்துச் சென்றனர். மோதியது பெரும் புயல். நீரில் சென்ற கப்பல், நிலை

குலைந்தது. இவரை எடுத்து வந்தது பிழையோ என்று எண்ணம் பிறந்தது.

அதனால், கப்பலில் இருந்த மூர்த்தியைக் கடலில் இட்டனர். அதன் பின் புயலும் அடங்கியது. உயிர் பிழைத்தோம் என்று அவர்கள் ஓடினர்.

எங்கே உற்சவர்? இனிய தரிசனத்தை இழந்தோம் என்று, பதறிக் கதறினர் பக்த கோடிகள். உணவை மறந்தனர்; உறக்கம் துறந்தனர்; எங்கும் அழுகுரல் எழுந்தது.

குலசேகர பட்டினத்தில் அருந்தவர் ஒருவர் இருந்தார். கந்தப் பெருமான், தான் இருக்கும் இடத்தை, அவர்க்குக் கனவில் அருளினன். வித்தகர் அவர் விரைந்தார். குறித்த இடம் சென்றார். கடவுள் பெருமானைக் கண்டார். எடுத்தார். எடுப்பான மரக்கலத்தில் ஏற்றினர். ஏத்தித் தொழுதார். சாந்தி நிலயமான சந்நிதியில், வரத சண்முகத்தை வைத்தார்.

கண்ட அடியவர், இன்பக் கண்மழை பொழிந்தனர். கை தலைமேல் ஏற, களி நடமாடினர். அருமையாக நடந்தது ஆராதனை,

நலம் சிறந்த சிவத்திற்கு, புருஷ கோலம் கொண்டநான், நான்காவது சக்தி. எமது திருமுகம் ஒன்று, சிவனார் திருமுகம் ஐந்து; ஆக முகம் ஆறு.

எமது திருக்கரம் நான்கு; எம்மான் திருக்கரங்கள் எட்டு; ஆக, பயனான திருக்கரங்கள் பன்னிரண்டு. எமது ஆழியும், எம்பிரான் சூலமும் ஒன்றித்த திருவுருவே திருக்கை வேல்.

எம் இடது கண் வழிவந்தார் தேவயானையார்; வரத சிவ வலக்கண் வழி வந்தார் வள்ளியார்; இவ்விருவருமே தெய்வ முருகனது தேவியர்.

யாவரும் வந்திக்கும் சிவமும் யாமும், பிரமணியம். நாங்கள் இருவரும், அவ் ஓங்காரன் திருவுருவில் ஒன்றியிருத்தலின், அவன் சுப்பிரமணியன் ஆகிறான்.

நான் நிலம்; சிவம் மலை; இந்த இரு நிலையும், கந்தமாதனப் பெயரால் இன்பச் செந்திலில் இருக்கிறது என்று,

திருமால் நாரதர்க்குக் கூறியதாக, வடநூல் ஒன்று, அரிய பல நுட்பங்களை அறிவிக்கின்றது.

திரிசுதந்தரர் வழிபாட்டை யேற்ற தெய்வச் செந்தில் கந்தனை, உபாசித்து உய்ந்தவர்கள் பலர். பயன்பெற்ற அவர்களுள் ஒருவர், பகழிக்கூத்தர்.

இவர் வைஷ்ணவர். அவருடைய தீரா வயிற்று நோய், திருச்செந்தில் பிள்ளைத்தமிழ் பாடியதும் தீர்ந்தது. இதற்குச் சன்மானம் இது என்று, தன் திருமார்பில் இருந்த மாணிக்கப் பதக்கத்தை முருகன் வழங்கினன். இப் பிள்ளைத் தமிழை, செந்திலில் இன்றும் வழிபாட்டுக் காலத்தில், ஓதுவார்கள் உள்ளம் உருகி ஓதுகின்றனர்.

4. பழனி.

இது, பயன்தரும் மூன்ருவது படைவீடு. வயல்வளம் உடைய தலம். இதற்கு, சிவமலை, சித்தன் வாழ்வு எனும் சிறந்த பெயர்கள் பலவுள. பொதினி எனும் புனிதத் திருநாமம், பழனியெனத் திரிந்தது என்று அரிது கூறுகின்ருர் ஆய்வாளர்.

தெய்வங்கட்குள் ஞானப் பழமான தெய்வம், இனிய பழனி மலைமேல் எழுந்தருளி யிருக்கிறது. பழனியும் பஞ்சாமிர்தமும், என்றும் சேர்த்து எண்ணப் பெறும்.

குராமர அடியிற் கோயில் கொண்டான். வையாபுரி அன்பர்க்கு வாழ்வு தந்தான். இடும்பன் இடும்பிக்கு, பரம் அருளைப் பாலித்தான். நித்திய நாதர், பிரமேந்திரர் முதலினோர்க்கு நிழல் தந்தான். சுவண குத்தர்க்குப் புத்திர சுகம் உதவினன். வசுமந்தர்க்கு, மாலோனும் வேலோனுமாக, மாறி மாறிக் காட்சி வழங்கினன். அகத்தியர் போகர் முதலினர்க்கு அருள் தந்தான். பழனித் தல புராணத்தை, மூன்றே நாளிற் பாடும்படி, வென்றி மாலைக் கவிராயர்க்கு விருதளித்தான். அருணகிரி நாதர்க்கு, அகத்தும் புறத்தும் அனுபவமானன். சேரமான் பெருமாட்குச் சேவை தந்தான். கண்ணிலாத மாம்பழக் கவிக்கு, அகக் கண் அளித்தான். மாதுளம் பழத்தின் மூலம்; அகில உலகையும்

ஒரு நொடியில் வலம் வர இயலுமெனலே உணர்த்தினன். ஒரு பற்றும் இலாதவர்க்கு, உயர்கின்றது வாழ்வு என்பதை, முண்டிதமாகி, கோவணமும் யோகதண்டும் கொண்டு, உயரிய பல குறிப்புகளை உணர்த்துகின்றான்.

இப்படி யெல்லாம், பழனியாண்டவர் செய்யும் செயல்களை, அருள் நூற்கள் பல அறிவிக்கின்றன.

ஐந்தறிவும் ஒருமையுற, பயன் தரும் தத்துவப் படியேறி, மாபெரும் ஆதார மண்டபத்தில் தங்கி, அமைதி பொங்கி, ஏகாந்த வெளிக்கு வருக! வருக என்று ஈர்த்து, முதன்மை இன்ப அருவியில் முழுக்காட்ட, உச்சியேறி யிருக்கின்ற முதல்வன், பழனி யாண்டவன் ஆன பரன்.

இப்பெருமானை, இடையருது உணரும் பெருமையாளர், வண்ணச் சரபம் முருகதாசர் எனும் திருப்புகழ்த் தண்டபாணி ஸ்வாமிகள். இவர், திருநெல்வேலியில் தோன்றி, திரு ஆமாத்தூரில் ஞான சமாதி கொண்டவர்; இவர் செய்துள நூற்கள் அளவிறந்தன.

பயன் உணர்ந்து சுவாமிகள் பாடியது பழனிப் பிரபந்தம். அதனுள் ஒரு பகுதி, பழனிப் பிள்ளைத் தமிழ். ஒவ்வொன்றும் அருமையான பாடல்கள். சொற்களின் அருமை, பிரயோக விவேகம், பொருளாழம் முதலியன, புனித இவர் நூலில் உள்ள புதுமை.

5. மயூரகிரி.

இத்தலம் இராமநாதபுரம் ஜில்லா திருப்பத்தூர்க்குக் கிழக்கில் 7 மைல் தூரத்தில் இருக்கிறது. இதற்குக் குன்றக்குடி என்றும் பெயருண்டு; குன்றுதோ ருடலில் இதுவும் ஒன்று. சிவத்தைச் சேவிக்கத் தேவர்கள் வந்தனர். ஆரவாரித்தன என்று, அவர்கள் ஊர்திகளை அழித்தது மயில். கருணை யற்ற நீ, கல்லாக என்று கந்தப் பெருமான் சபித்தனன்.

மாபெரும் சாபத்தை யேற்ற மயில், சிறக்கப் பலகாலம் தவத்தைச் செய்தது. அருளார்ந்த ஆறுமுகன், அருங்காட்சி யளித்தான். சாபம் தவிர்ந்து, பேருன வாழ்வை

மயில் பெற்றது. இவ்வரலாறு என்றும் எவர்க்கும் நினைவில் இருக்க, குன்றா யிருக்கிறேன் அடியேன்; குமரா! அதன் மேல், நீ என்றும் குடியாயிரு என்று வேண்டிக் கொண்டது அம்மயில். இணங்கிய பெருமான் அருளிய வண்ணம், மயூரகிரி எனும் அத்தலம், குன்றக்குடி யென்றும் குறிப்பிடப்படும்.

மயூரகிரி சண்முக நாதர் பிள்ளைத் தமிழ் பாடியவர், மழவை-சுப்ரமண்ய பாரதி. இவர் தஞ்சை, சேதுபதி முதலினோரிடம், பெருஞ் செல்வாக்குப் பெற்றவர்.

புத்திரப்பேறு கருதி, இத்தலத்திற்கு வந்தார். பல நாள் மலையை வலம் வந்தார். ஒருநாள், புனித சந்நிதியுள் புகுந்தார். உபவாசம் இருந்தார். பிள்ளை வேண்டுமேல், பிள்ளைத்தமிழ் பாடு என்று அகமுகமான ஒரு அறிவிப்புப் பிறந்தது. அப்படியே அப்படியே என்று அலறினர். பேறு தரும் இப்பிள்ளைத் தமிழைப் பாடினர். அறுமுகவன் திரு முன் அரங்கேற்றினர். அதன் பயனாக, இரு பிள்ளைகளைப் பெற்றார். பக்தர்கள் இதனைப் பாராயணம் செய்து, பாரதியார் கண்ட பயனை, தாமும் இன்று காண்கின்றார்.

பிற பிரதிகளை நம்பி, இதை மயிலாடு துறைப் பிள்ளைத் தமிழ் என்று பதிப்பிக்கப் பட்டது; பிறகு கிடைத்த பல பிரதிகளில் இது, மயூரகிரிப் பிள்ளைத் தமிழ் என்று அறியப் பெற்றோம். ஆதலின், அன்பர்கள் இதை மயூரகிரிப் பிள்ளைத் தமிழ் என்றே திருத்தி வாசிக்க வேண்டுகிறோம்.

6. திருத்தணிகை.

இது, படைவீடுகளில், குன்றுதோருடலைச் சேர்ந்தது. செருத்தணி, உற்பலகிரி, கல்லார கிரி எனவும் பெயர் பெறும். அமைதி தரும் அருமைத் தலம். "புவிக்கு உயிராகும் திருத்தணி" என்றும்,

"பலகாலும் உனைத்தொழு வோர்கள்
மறவாமல் திருப்புகழ் கூறி
படிமீது துதித்துடன் வாழ அருள் வேளே"

என்றும், என்றோ பாடிய திருப்புகழ் அனுபவம், இங்கு இன்றும் நிகழக் காண்கிறோம்.

ஸ்ரீவள்ளி தேவயானையாருடன், சண்முகப் பெருமான் இங்கு சாந்த மூர்த்தியாக எழுந்தருளி யிருக்கிறார். பரம குமரனை இங்கு வழிபட்டு உய்ந்தவர்கள் பலர். அவர்களுள் ஒருவர் ஸ்ரீ கந்தப்ப தேசிகர்.

இவர் சிவஞான முனிவரின் மாணவரான கச்சியப்பரிடம் கற்றவர்; விசாகப் பெருமாளையா, சரவணப் பெருமாள் ஐயர் என்பவர்தம் தந்தை. இவர் செய்த நூற்கள் பல. அவைகளுள் ஒன்று, திருத்தணிகைச் சந்நிதி முறை. அதனுள் ஒரு பகுதி, திருத்தணிகைப் பிள்ளைத்தமிழ். இது அருமையான இலக்கியம். நினைக்கத் தக்க செய்திகள இதனில் நிறைந்திருக்கின்றன.

7. வைத்தீசுவரன் கோயில்.

இது ரயிலடிக்கு அண்மையில் இருக்கிறது. சீகாழிக்குத் தென்மேற்கில் 3½ மைலில் உளது இப்பதி. புள்ளிருக்கு வேளூர் என்றும் இதற்குப் பெயருண்டு. இங்குள முத்துக்குமாரசுவாமி திருவுருவம், காணத்தக்க கவினுடையது.

பாண்டிநாட்டு ஸ்ரீ வைகுண்ட கயிலாயத்தில் பிறக்கும் போதே ஊமையாய்ப் பிறந்து, திருச்செந்தில் முருகன் அருளால் பேசும் திறன்பெற்று, கந்தர் கலிவெண்பா மீனாட்சிப் பிள்ளைத்தமிழ் முதலிய பல பிரபந்தம் பாடி, தருமபுர ஆதீனம் ஸ்ரீ மாசிலாமணித் தேசிகரிடம் தீட்சை பெற்று, காசிமடம் அமைத்த கருணையாளர், ஸ்ரீ குமரகுருபர ஸ்வாமிகள்.

அவர் ஒரு சமயம், வைத்தீசுவரன் கோயிலுக்கு வந்தார். செவ்வேள் குமரனைச் சேவித்தார். தாய்க்குப் பிள்ளைத் தமிழ் பாடினை; குமர குருபரா! சேய்க்குப் பாடாதது ஏன் என்று, வேலிறைவன், ஆவேசகர் மூலம் வினவினன்.

உவகை மிகுந்த அந்நிலையில், பிறந்தது இப் பிள்ளைத் தமிழ். மணம் கமழ் தெய்வத்து இளநலம் காட்டுவன் மயிலிறைவன். அவனது அருள் நல ஆக்கங்களை, அருமை நடையில் அறிவிக்கிறது இந்த அருள் நூல்.

8. சேயூர்.

இது, செய்யூர் எனவும் வழங்கும்; மதுராந்தகத்திற்குக் கிழக்கே 16 மைல் தூரத்தில் உளது. இங்கு உள்ளம் அள்ளும் முருகன் திருவுரு. இப்பெருமானை அனுபவித்தவர், அந்தகக்கவி வீரராகவ முதலியார். இவர், காஞ்சிபுரத்திற்கு அருகில் உள்ள பூதலூரில் பிறந்தவர். இலங்கை பரராச சேகரனிடம் பரிசு பெற்றவர். செய்த நூல்கள் பல. அவைகளுள் ஒன்று சேயூர் முருகன் பிள்ளைத்தமிழ். ஒவ்வொரு பாடலும் அன்பு குதிபோடும் அருமை நடை.

9. திருப்போரூர்.

இது தொண்டை நாட்டுத் தலம். சென்னையிலிருந்து 26 மைல். இத்தல மூர்த்தி மிக அருமையானது. காணத்தக்க கம்பீரமான திருவுருவம். பலதரம் சிலமான இத்தலம், ஸ்ரீ சிதம்பரஸ்வாமிகள் காலத்தில் ஜீரணோத்தாரணமானது. இத்தலத்திற்கு ஒரு பிரபந்தம் உண்டு; அதைச் செய்தவர் ஸ்ரீ சிதம்பரஸ்வாமிகள். பிரபந்தத்தின் ஒரு பகுதி, பிள்ளைத்தமிழ். வேத ஆகம சாரமான செய்திகள் பலவற்றை, கவிநலம் மிக்க இப் பிள்ளைத் தமிழிற் காணலாம்.

10. திருமலை.

இத் திருப்பதி, செங்கோட்டையை அடுத்து இருக்கிறது; தென் காசி வட்டத்தைச் சேர்ந்த பண்புழி எனும் ஊரில் உளது. பண்பை நகர் என்பது ஆதியில் இருந்த பெயர். ஊர் பேர் பண்புழி; கோயில் பெயர் திருமலை; குன்றின் மேல் உள்ள கோயில்; அற்புதமான மூர்த்தம். இங்கு வீற்றிருக்கும் முருகன் திருவுருவை எண்ணி யுருகியவர், ஸ்ரீ கவிராஜ பண்டாரத்தையா என்பவர். இலஞ்சிப் பிள்ளைத் தமிழ் பாடிய தம் திருவாயால், திருமலை முருகன் பிள்ளைத் தமிழும் பாடியுளர். இவர் 75 ஆண்டுகட்கு முன் இருந்தவர். கல்லான மனத்தையும் கனிவிக்கும் இவர் கவிவளம்.

செய்யுள் முதற்குறிப்பு.

பக்கம்

அ

அடரும் 21
அண்டபேரண்டங்கள் 32
அமமை முலை 9
அரவின் மணிகளும் 4
அரவு சிறு 28
அரிக்கும் 97
அருகிருக்கும் 46
அரை வடமும் 27
அவ்வென்று 44
அளைகடை 86

ஆ

ஆசினியின் 51
ஆறு சமயக் கடவுள் 82

இ

இசைக்குழலும் 91

உ

உகமும் பரித்தொகை 93
உதடு கடந்த 88
உதய ஆதவற்கும் 73
உரகரும 15
உருத்து 94
உருமே கடுக்கும் 74
உலக மாதா 11
உவந்து 78

எ

எம்பாதகம் 5
எழுத்தாய் நிகரும் 78

ஒ

ஒரு கை மணி 7
ஒழியாத 66
ஒளி வளர் 17

பக்கம்

ஓ

ஓங்கு மறை 13

க

கங்குல் 22
கங்குல் இன்றிய 34
கங்கை முடி 63
கட்டை முள 83
கண்ணனும் 49
கந்தனை 9
கனக குவடு 80
கனம திகழ் 95
கன்னல் குதலை 55
கானத்தை 52
கானே கமழும் 71
கிளிமொழி 87
குடமுழாவாணன் 81
குன்றைத் திறந்திட்ட 67
கூரும் இகல் 26
கூனல் 19
கோவே 70

ச

சரண மலர்கள் 59
சரணமென 41
சீரிய வேலாயுதனை 3
சீலத் தபோதனர்கள் 34
சுடர் முக 48
சுற்றின முழங்கும் 75
சொல்தரு பெரும்புலவூர் 61

த

தகுவர் 58
தண் தேன் 23

	பக்கம்
தருமன்னு	65
தள்ளும் பவக்கடல்	68
தன்னைத்த தெய்வ	69
தாயென்று	47
திருககஞ்ச	1
தென்றல்	56
தொண்டனை	8
ந	
நகைத்தண்	76
நற்றவம்	39
நாவலம்	50
நாறு மலர்	36
நிறை பெறு	37
நீடு பரம்பரை	18
நெட்டுடல்	66
ப	
பங்கயன்	29
படவாள் அரவு	38
பல பல்	35
பாம்பால்	24
பாயிருள்	64
பாரோடு பதினு லு	98
பார்த்திவம்	12
பிறப்பும் இறப்பும்	57
புகர்படு	85
புவியுலகு	92
பெருகு கருணைக் கடல்	96

	பக்கம்
பொன் மய	14
பொன்மௌலியும்	99
பொன்னுலகில்	10
ம	
மகம் முயன்றிடு	33
மங்கல	25
மங்கல மடப்பிடி	100
மண்டலம்	60
மந்தரம் சுழலாது	40
மந்திர சடாக்கரம்	31
மரகத வடிவம்	26
மரகத மணிக்குவடு	89
மருவிற் பசுமை	72
மனனுதன்	43
முந்தி வரு சூரர்	6
முடி யாறுடையாய்	2
முடியோர் ஆறு	8
முளைத்து	45
வ	
வாள் தடம்	53
வரன் உண்டு	42
விட்டிலகு	16
விண் தலத்து	42
விரவிய	16
வெய்யோன்	77
வெளியில் வளி	84

உ

முருகன் துணை

1. காப்புப் பருவம்

(மார்க்க சகாயர் அருளிய)

திருவிரிஞ்சை முருகன் பிள்ளைத்தமிழ்

[திருமால் முதலினோர் சேயைக் காப்பாராக என்று, இரண்டாம் திங்களில் வேண்டும் பருவம் இது.]

திருவருள்

1. [1]திருக்கஞ்ச இருகரத்தின் [2]அபயவர தமும்சேர்
திகழும் [3]மரகதம் அளித்த தெய்வசிகா மணியை,
[4]அருக்கன் சந்திரன் தவழும் [5]புரிசை [6]விரிஞ்சையில் வாழ்
ஆறுமுகத்(து) அரசை, எமை ஆண்டவனைப் புரக்க;
பெருக்கம் சந்ததம் மேவும் [7]சிவநாதன் இடத்தில்
பிறந்த ஒரு [8]சிறுபாலன் [9]பெருங்காணி பெறவே,
[10]இருக்கஞ்சன் முதல் அமரர் அரகர என்(று) ஏத்த
இளைத்த பிறை சூடுமுடி [11]வளைத்த திருவருளே

(1) திருக்கஞ்சம் - அழகிய தாமரை (போன்ற). (2) அபயம் - அச்சம் அகற்றும்; வரதம் - அருளல் செய்யும்; இப்படி இருந்த கரம் இரண்டு என்றபடி. (3) மரகதம் - மரகதாம்பிகை. (4) அருக்கன் - சூரியன். (5) புரிசை - மதில் (சூழ்ந்த). (6) விரிஞ்சை என்பது ஸ்தலப் பெயர். (7) சிவநாதன் என்பது ஆதிசைவ வேதியர் ஒருவர் பெயர். (8) சிறுபாலன் - ஐந்து வயதுடைய சிவசர்மா. (9) பெருங்காணி - மான்ய நிலம். (10) இருக்கஞ்சன் - சிறந்த தாமரைமேல் வீற்றிருக்கும் பிரமதேவர். (11) முடி வளைத்த என்பது, அபிஷேகம் செய்ய எட்ட வில்லையே திருமுடி என்று ஏங்கிய பாலனுக்கு இரங்கி, எட்டும்படி தன் திருமுடி சாய்த்துக் கொடுத்த திருவிளையாடலைக் குறித்தது. (1)

திருநீறு

வேறு சந்தம்

2\. முடியா றுடையாய்! குமரா! சிவமோட் சத்தேற்றும்
முருகா! அசுரே சர்களா கியகாட் டைப்[1]பாற்றும்
முனைவா! கருணா கரனே! மறைவாக் கில்சாற்றும்
முடியா முதலே! [2]தளை ஓ [3]திமனூர்க் குப்பூட்டும்
அடியார் துணையே! அவர்பால் விளையாட் டைக்காட்டும்
அமுதே! கனியே! [4]நறவே! [5]முருகாற் றைக்கேட்கும்
அரசே! எமதா ருயிரே! எமைஊத் [6]தைக்கூட் டில்
அடையா நெறிநீ அருள்வா யெனவாழ்த் திப்போற்றி,
விடியா [7]மலமா யைகளாம் இருள்தீர்த் துத்தீர்த்து,
விழிநீர் தருயோ கிகள்சேர் தருவீட் டுக்கேற்ற
[8]வெளிரு அமுதாய், உலகோர் இடர்நீக் கப்பாட்டு
மிகஓ தமுனுள்[9] ஒருநே யன்உள்நாக் கில்தீட்டும்
வடிவே லுடனே, வயல்சூழ் [10]கரனூர்க் குள்தோற்றும்
மயிலே றியசேய், சிறுவாள் [11]நுதல்மேல், [12]போன்பூத்த
[13]மலைமான் முலையூ றியபா லொடுகூட் டிச்சாத்தும்
[14]வளைபோல், மதிபோல் ஒளிசேர் திருநீற் றுக்காப்பே.

(1) பாற்றும் - அழிக்கும். (2) தளை - விலங்கு. (3) ஓதிமனூர்க்கு - ஓதிமம் எனும் அன்னத்தை வாகனமாக வுடைய பிரமனுக்கு; வேதம் ஓதும் பிரமனுக்கு எனினு மாம். (4) நறவே - தேனே. (5) முருகாற்றை - திரு முருகாற்றுப் படையை. (6) ஊத்தைக் கூட்டில் - அழுக்குப் பொதிந்த கூடான உடம்பில்; "பீளையும் நீரும் புறப்படும் ஒரு பொறி; மீளும் குறும்பி வெளிப்படும் ஒரு பொறி; சளியும் நீரும் தவழும் ஒரு பொறி; உமிழ்நீர்க் கோழை ஒழுகும் ஒரு பொறி; வளியும் மலமும் வழங்கும் ஒரு பொறி; சலமும் சீயும் சரியும் ஒரு வழி; உள்ளூறத் தொடங்கி வெளிப்பட நாறும்" எனவரும் பட்டினத்தார்

பாடல் இங்கு எண்ணத்தகும்; ஊத்தைக் காட்டில் என்றும் பாடம் உண்டு. (7) மலம் - ஆணவம். (8) வெளிரு - கெடாத. (9) ஒரு நேயன் - அருணகிரிநாதர். (10) கரன் எனும் அவுணன் வழிபட்டுப் பேறு பெற்றதால், விரிஞ்சைக்குக் கரனூர் என்று ஒரு பெயர் உண்டு. (11) வாள் - ஒளி. (12) பொன் - அழகு; பொன்போல் திருநீறு மலர்ந்த எனினுமாம். (13) மலைமான் - பார்வதி. (14) வளை - காப்பு. திருவருள், எம்மை ஆண்டவனைப் புரக்க என முடிவு காண்க. புரக்க என்பது, தான் காப்படைய, திருவிரிஞ்சை முருகன் முன் திருநீறு, காவல் பணியாற்றுவதாக என்றபடி. காப்புப் பருவம் முழுதும் இப்படியே பொருள் காணப் பெறும். (2)

மார்க்க சகாயர்

வேறு சந்தம்

3. [1]சீரியவே லாயுதனைச், செவ்வேளைக், குகனை,
தேவர்கள்சே னாபதியைத், திருமயில்வா கனனைக்,
காரியகா ரணம்கடந்த கடவுளை, எம் கோனைக்,
கரபுரியில் ஆறுமுகச் சேவகனைக் காக்க;
[2]கூரியகுந் தளதேசத் [3]தனபாலன் மகிழக்
குளிர்பிறையும், சடைமுடியும் மழுமானும், பணியும்,
[4]வாரியிருள் கடுமிடறும், [5]நுதல்விழியும் மறைத்தே
[6]மறைப்புரியில் வழித்துணையாய் வந்தருள்சே [7]வகனே!

(1) சீரிய - சிறந்த. (2) கூரிய - கூர்மை அறிவு கொண்ட. (3) தனபாலன்-மிளகுவியாபாரியான ஒரு பக்தன். (4) வாரி யிருள் கடு மிடறும் - கடலில் எழுந்து இருண்ட அதிபயங்கர விடம் உண்ட திருநீலகண்டமும். (5) நுதல் விழியும் - நெற்றிக் கண்ணும். (6) மறைப் புரியில் – வேதம் பூசித்த விரிஞ்சைப் பதியில். (7) சேவகனே - வீரனே

இது, மிளகு வியாபாரியான தனபாலச் செட்டிக்குக் காப்பாக, வீரன் உருவில் வேதக் குதிரைமேல் வழித்துணை வந்த திருவிளையாடல். வழித்துணையாய் வந்தருள் சேவகன், ஆறுமுகச் சேவகனைக் காக்க என்றபடி. (3)

மரகதாம்பிகை

4. வேறு சந்தம்

1அரவின் மணிகளும், 2அருண கிரணமும் அழிய ஒளிவிடு 3தோற்றனை ;
அழகு பொழிதரும் இளைய குமரனை ; அசுர ரொடுபொரு சீற்றனை ;
4அயனும்மலைவுறும்மறையின் இறுதியை,அமுதமொழிகொடு5தேற்றனை ;
அடிமை படுமவர் கொடுமை பொடிபட, முடுகி எழும்அருள் ஊற்றனை ;
6விரவி அளியினம் முரல, நறவுறு குவளை மலர்கமழ் 7நாற்றனை ;
8விழிகள் ஒருபதொ(டு) உபயம் உடையனை ; 9மிருகமதம் 10அகில் [சேற்றனை
விருது பெறுகரு 11தலர்கள் உடலுயிர், 12விடுதி பெற13அடு கூற்றனை
14விபுதர் புகழ்கர புரியில் வரும்அறு முகனை ; அணிதிரு நீற்றனை ;
15இரவி மதிஅழல் நயனி, 16பரிபுர சரணி, கௌரி, சடாட்சரி,
இறைவி, திரிபுர தகனி, முனிவர்கள் இதய மலரை 17விடாக்கிளி ;
எழுக டலும்எழு புவியும்அருளியும், இளமை நலம்அழி யாக்குயில்,
இழிஞர் தொழிலது புரியும் அறிவிலர், இடர்கள் இடிய அராப்பிடி,
18வரையில் உறைபவள், கருணை மழைபொழி 19வதனி, 20சடிலி, [21மகோத்தமி,
22வடுகி, பகவதி, குமரி, சிவனிடம் மருவி, 23நிறையக லாத்திரு ;
24வனச மலர்மகள், சகல கலைமகள் வழிய டிமைவினை தீர்ப்பவள் ;
மலையின் மடமகள், 25வருண 26மரகத வலி27அமலி யவள் காக்கவே.

(1) *அரவின் மணிகளும் - பாம்புகள் உமிழ்ந்த மாணிக்கங்களும்.* (2) *அருண கிரணமும் - செந்நிறமான சூரியனுடைய ஒளிக் கற்றைகளும்.* (3) *தோற்றனை - தோற்றம் உள்ளவனை.* (4) *அயனும் - பிரமனும்.*

(5) தேற்றனை - தெளிவித்தவனை. (6) அளி இனம் விரவி முரல - வண்டுக் கூட்டங்கள் மொய்த்து ஒலிக்க. (7) நாற்றனை - மணம் கமழ இருந்தவனை. (8) விழிகள் ஒருபதொடு உபயம் - பத்தும் இரண்டுமான பன்னிரு கண்கள். (9) மிருகமதம் - கஸ்தூரி. (10) அகில் சேற்றனை - அகில் குழம்பு பூசிய மேனியனை. (11) கருதலர்கள் - பகைவர்கள். (12) விடுதிபெற - நீங்க. (13) அடு - மோதிய. (14) விபுதர் - தேவர்கள். (15) இரவிமதி அழல் நயனி - சூரிய சந்திர அக்கினியாம் மூன்று கண்களையுடையவள். (16) பரிபுர சரணி - சிலம்பணிந்த திருவடிகளை யுடையவள். (17) விடாக்கினி - அகலாத ஞானக்கினி மயமானவள்; விடாக்கிளி என்றும் பாடம். (18) வரையில் உறைபவள் - பர்வதத்தில் உறையும் பார்வதி. (19) வதனி - திருமுகத்தினள். (20) சடிலி - ஜடையை யுடையவள். (21) மகோத்தமி - மகத்தான உத்தமி. (22) வடுகி - துர்க்கை சொரூபி. (23) நிறை - பத்தினித் தருமம். (24) வனச மலர்மகள் - தாமரை மேலுள்ள திருமகள். (25) வருணம் - சிறந்த. (26) மரகதவலி - மரகத வல்லி. (27) அமலி - களங்கம் இலாதவள். (4)

கங்கை

வேறு சந்தம்

5. எம்பா தகம்நீக் கியவே லவனை,
இமையோர் அரசைக், குமரேசனை, என்
இதயத்(து) இருளைக் களையும் குகனை,
அம்பால் மொழிஅம் மையளித் தருளும்
அமுதைக், கனியைக், கரனூர் தனில்வாழ்
அடியார் பெருவாழ்வை, அளித்தருள்க;
கம்பா நதி,கோ தமை,கா வேரி,
[1]காளிந்தி, கோதா விரி[2]பா லிநதி
[3]கனகா நதி,கண் டிகை,குண் டிகை,சூழ்

பம்பா நதி,வா [4]னதி,சீ தைநதி,
பாஞ்சா லி,தபோ நதியே முதலாம்
பலவாம் நதியா னபகீ ரதியே

(1) காளிந்தி-யமுனை. (2) பாலிநதி-பாலாறு. (3) கனகா நதி - பொன்முகரி ; இது காளத்தியில் பாயும் நதி. (4) வானதி-ஆகாய கங்கை; இப்பாட்டில் கங்கையின் அம்சமான நதிகளைக் குறிப்பிட்டு, முதலாம் பலவான என்றமையின், அம்ச நதிகள் இன்னும் பலவுள எனவே ஓர்க. (5)

கணபதி

வேறு சந்தம்

6. முந்திவரு சூரர்இனம், மாளச் சிவந்தவனை ;
முன்புகடல் நீர்[1]சுவற, வேல்[2]தொட்ட [3]செங்கையனை ;
[4]முண்டகனை நூல்வினவி, வாதித்த [5]புங்கவனை ;
[6]மொய்ம்புபெற வேதொழுத, கீரற்(கு) இரங்கினனை ;
எந்தையை, என் ஆவியை, என் ஆவிக் (கு) அருந்துணையை,
என்சிரசில் [7]ஓலமிடு பாதச் சதங்கையனை ;
இன்பமுரு கேசனை; மெய்ஞ் ஞானக் கொழுங்கனியை ;
எங்கள்கரன் ஊரில்,மயி லோனைப் புரந்தருள்க ;
[8]அந்தரம் எலாம்அதிர வாய்விட்டு, [9]மண்டிவரும்
[10]அஞ்சலர் எலாம்[11]முறிய வால்சுற்றி; [12]மஞ்சுதனை
அங்கைகொடு தாவி,அதன் நீரைப் பிழிந்து, கடல்
அம்புவி யெலாம் நெளிய ஓடித் திரும்பிவிட,
[13]மந்தரம் எலாம் அசைய வேமுட்டி, அங்குலவு
[14]வன்பரிதி தேர்முறிய வேகுத்தி, வெண்தரளம்[15]
வந்துலவும் [16]ஏழ்சலதி நீர்வற்ற உண்டுமிழும்
[17]வண்டுகள் மதாசலம தாய்,உற் றிருந்தவனே !

(1) சுவற-வற்ற. (2) தொட்ட-ஏவிய. (3) செங்கையனை - உக்ர குமார பாண்டியராக அவதரித்தவனை. (4) முண்டகனை-

பிரமனை. (5) புங்கவனை - மிடுக்குடையவனை. (6) மொய்ம்பு - (கற்கிமுகி பூதத்தினிடம் இருந்து தப்பும்) ஆற்றல். (7) ஓலம் இடு - ஒலிக்கின்ற. (8) அந்தரம் - ஆகாயம்; உலகம் எனினுமாம். (9) மண்டி - மொய்த்து. (10) அஞ்சலர் - பயம் கண்டறியாத பகைவர்கள். (11) முறிய-சிதைவுபட்டு அழிய. (12) மஞ்சுதனை-மேகங்களை. (13) மந்தரம் முதலிய எண்திசை மலைகள். (14) பரிதி - சூரியன். (15) தரளம் - முத்துகள். (16) ஏழ் சலதி – ஏழு கடல்கள். (17) வண்டுகள் மதா சலம் - (வேத) வண்டுகள் மொய்க்கும் மத வெள்ளமாக; மதாசலமதாய் உற்று இருந்தவன், மயிலோனைப் புரந்தருள்க எனக் கூட்டுக. (6)

வைரவர்

வேறு சந்தம்

7. ஒருகைமணி, ஒருகை கயி(று,) ஒருகைசரம்[1], ஒருகை சிலை,
ஒருகைகடம், [2]ஒருகை வடிவாள்,
பொருகழுமுள் [3]ஒருகை,சிரம் ஒருகை,இவை யுடையகர
புரிவடுகன் [4]அடிதுதி செய்வாம்;
முருகை,அரி மருகை,மயில் முனியை,மறை முதலை,அறு
முகனை,உமை மகனை,அடியார்
இருள் அகல வருகுகனை, எமையடிமை கொளும்அரசை,
இனிமையொடு [5]புரவு செயவே.

(1) சரம் - கணை. (2) கடம் - கமண்டலம்; ஒருவகைப் படையுமாம். (3) கழுமுள் - ஒருவகை ஆயுதம். (4) வடுகன்-வைரவன். (5) புரவு-காப்பு. வடுகன் புரவுசெய்க என்றபடி. (7)

திருவேல்

வேறு சந்தம்

8. முடிபொர் ஆறுடை யானை,எம் ஐயனை,
முதல்வனைச், செவ்வேளைப்,
[1]படியெ லாம்புகழ் தேவனை, விரிஞ்சையம்
பதிமுரு கனைக்காக்க ;
கொடிய [2]தானவர் குருதியில் ஆடி,வெம்
குடலெனும் [3]தொடை சூடி,
[4]நெடிய யாக்கையின் [5]நிணமெலாம் அருந்திய
அவன் கையின் நெடுவேலே!

(1) படி எலாம் - எவ்வுலகும். (2) தானவர் குருதியில் ஆடி - அவுணர்தம் உதிர வெள்ளத்தில் மூழ்கி. (3) தொடை - மாலை. (4) நெடிய யாக்கையின் - (அவர்தம்) பெரிய உடல்களின். (5) நிணமெலாம் - கொழுப்பனைத்தும். வேல், முருகனைக் காக்க என்றபடி. (8)

திருமயில்

9. வேறு சந்தம்

தொண்ட னுக எமைக் கொளும்சிறு தோன்றலைச்,சதுர் வேதநூல்
சொல்லும் மாமணி வாயனைச்,சுக மாயிருந்து மணம் கொளும்
வண்டு சேர்தரு [1]நீப மாலைய னைத்,திருக் கரன் ஊரில் வாழ்
மரக தக்கொடி பெற்ற செஞ்சுடர் மணியை, அன்பொடு காக்கவே;
அண்ட [2]கூடம் நடுங்க, [3]மால்வரை தூளியாக, அத் தூளியால்
[4]ஆழி ஏழும் நிரம்பி, மேடு படக், [5]கலாபம்அ டித்தெழுந்(து)
எண்தி சாமுக மும்,க டைக்கண் இமைக்கு முன்னம்உ லாவியே,
என்றும் ஆடல் இயற்றி வாழ்,அவன் ஏறு கின்றம [6]யூரமே!

(1) நீபமாலையனை - கடப்பமலர் மாலை யணிந்தவனை. (2) கூடம் - உச்சி. (3) மால்வரை - மேருமுதலிய மலைகள். (4) ஆழி ஏழும் - ஏழு கடலும். (5) கலாபம் - தோகை ; (6) மயூரம்-மயில். மயூரம் அன்பொடு காக்கவே எனக்கூட்டுக. (9)

திருமுருகாற்றுப் படையும் திருப்புகழும்

வேறு சந்தம்

10. அம்மைமுலை யுண்டு விளையாடும் இளையோனை, எமை
ஆட்கொண்ட குமரேசனைச்,
செம்மையுள ஆறுமுக னைத்,திரு விரிஞ்சைவரு
சேயைப் புரந்தருள்கவே ;
[1]மும்மைமலம் அகலநக் கீரமுனி சொன்னதிரு
முருகா(று) எனும்[2]தேறலும்,
எம்அருண கிரிநாதர் ஓதுபதி னுரு
யிரம்திருப் புகழ் அமுதுமே !

(1) மும்மை மலம் - (ஆணவ கன்ம மாயை எனும் மூன்று அழுக்குகள். (2) தேறலும் - தேனும். தேன்போல் இனிப்பது திருமுருகாற்றுப்படை ; அமுது போல்வது அருமைத் திருப்புகழ் எனலை இங்கு ஓர்க. (10)

பலதேவர்கள்

வேறு சந்தம்

11. கந்தனை, வேளை, விரிஞ்சையின் மேவு [1]கடப்பனை, மாதுமையாள்
மைந்தனை, வேலனை, எம்கும ரேசனை, வந்திரு தாள்பணிவார் ;
இந்திரர், வானவர், சந்திர சூரியர், எண்திசை யோர்,முனிவோர்,
[2]செந்திரு மார்பினர், விஞ்சையர், பாதலர், [3]செங்கம லாசனரே !

(1) கடம்பனை - கடப்ப மாலை யணிந்தோனை. (2) செந்திரு மார்பினர் - திருமால். (3) செங்கமல ஆசனர் - பிரமதேவர். பின் இரண்டடியில் உள்ள மேலோர், பரம குமரன் திரு வடிகளைப் பணிகின்றவர் எனலை, முன்னிரண்டு அடிகளில் நினைப்பூட்டிய அருமையே அருமை. (11)

2. செங்கீரைப் பருவம்

(அருணாசல கவிராயர் அருளிய)

திருப்பரங்குன்றம் பிள்ளைத்தமிழ்

[ஒருகால் முடக்கி, ஒருகால் நீட்டி, இரு திருக்கரங்களையும் நிலத்தில் ஊன்றி, தலை நிமிர்த்து, திருமுகம் அசைத்து ஆடும் பருவம் இது, ஐந்தாம் மாதத்தில் நிகழ்வது.]

12. பொன்னுலகில் இந்திரன் முதல்[1]புலவர் அனைவரும்
[2]பொருவறு மகிழ்ச்சி பூப்பப்
போர்அசுரர் வேரறச் செய்து,முன் போல்முடி
புகுந்(து)[3]அரசு புரிய வைத்தாம் !
இன்னும்அவர் யாரையும் [4]விடேம் என்று, [5]மேதையின்
இருங்கர வினைதெரித் தாங்கு,
[6]இவனையும் [7]பொரமேல் [8]எழா(து)உள் [9]இருத்துவாம்
எனநீ இருந்தல் போலப்,
பன்னும்இரு நிலனுற இரண்டுகைத் தலமும்
பதித்(து,)ஒரு முழந்தாளும் அப்
படிபதித்(து,) ஒருமுழந் தாள்நிலை நிறுத்தி,[10]இரு
பாலும் மேலும் பார்த்தல் போல்,
[11]தென்னுலவு திருமுகம் நிமிர்த்தசைத்(து,) அரிமருக !
செங்கீரை ஆடி யருளே !
சிற்பரம் பொருள்அருளும் நல்பரங் கிரிமுருக !
செங்கீரை யாடி யருளே !

(1) புலவர் - தேவர்கள். (2) பொருவு அறு - ஒப்பற்ற. (3) அரசுபுரிய - அரசாள. (4) விடேம் – கைவிடமாட்டேம். (5) மேதையின் இரும் கர வினை தெரித்தாங்கு - (தனது) மேம்பட்ட அறிவிற் சிறந்த திருக்கரச் செயலை உணர்த்துவதுபோல. (6) இவனையும் - (பிள்ளைத் தமிழ்

பாடும்) இந்த அடியவனை என்னையும். (7) பொர (அரிஷாதி தோஷ அவுணர் வந்து) மோத (8) மேல் எழாது - மேல் எழாதபடி. (9) உள் இருத்துவாம் என - இதயத்தில் வைப்பம் என்று. (10) இருபாலும் - இரு புறமும். (11) தென் உலவு - தென் திசை பார்த்த; அல்லது இனிமை விளங்கும் எனினுமாம். (1)

13. [1]உலகமா தாஅன்றி, [2]ஓர் ஆறு மாதாவும்
உள்ளம் களித்து, நேரே
உற்றுற்று நோக்கி, [3]எழில் சாலா(து) இதற்கிதென்(று,)
ஒவ்வொரு விதத்தி னும், சீர்
இலக, முகம் [4]மதியெனக் காணிய [5]உடுக்குலம்
[6]எழீஇ வந்(து) இருத்தல் ஏய்ப்ப,
[7]இட்டவெண் [8]நித்திலச் சுட்டியொடு பட்டமும்,
[9]இளங்கதிர் எறிக்கும் [10]மணிகள்,
பல்கலவும் உயர்செவிப் பொன்குழையும், இளமழப்
பணிகள் பிறவும் [11]திருத்திப்,
பார்ப்பவர்கள் கண்ணெச்சில் வாரா(து) இழைத்த
பரிகார மாக, அணிமண்
திலகநுதல் அழகுதர, ஒளிர்செழும் [12]செங்களிறு
செங்கீரை யாடி யருளே!
[13]சிற்பரம் பொருளருளும் நற்பரங் கிரிமுருக!
செங்கீரை யாடி யருளே!

(1) உலக மாதா - உலக அன்னையான உமாதேவி. (2) ஆறு மாதாவும்—(கார்த்திகை மாதரான)-ஆறு தாயரும். (3) அலங்கரித்துப் பார்த்து, இந்த அணி பொருந்தாது என்று, பலவகையால் மேலும் மேலும் செய்யும் செயற்கைக் கோலம் விளங்க என்றபடி. (4) முகம் மதி யெனக் காணிய - திருமுகத்தைச் சந்திரன் என்று கண்ட. (5) உடுக் குலம் -

நட்சத்திரங்கள். (6) எழ்இ வந்து இருத்தல் ஏய்ப்ப - புறப் பட்டு வந்து சூழ்ந்து இருத்தல போல. (7) இட்ட - தரித்த. (8) வெண் நித்திலச் சுட்டியொடு - வெண்ணிற முத்துக் களாலான (நெற்றிச்) சுட்டியுடன். (9) இளம் கதிர் எறிக் கும் - இளம் ஒளி வீசும். (10) மணிகள் பல கலவும் - பல இரத்தினங்களைக் கலந்து அமைத்த. (11) திருத்தி - திருத்தமுற அணிந்து. (12) செங்களிறு - சிறந்த அருள் மத யானையே! (13) சித்பரம் பொருள் அருளும் - பரம் பொருளான சிவனார் அருளிய. (2)

14. [1]பார்த்திவம் தனில்,அவுண இருள்கிழித்(து) எழுபெரும்[2]
பரிதியென நின்னை யெண்ணிப்,
பன்னிரு செவிக்கணும் பன்னிரு [3]கதிர்க்கடவுள்
பண்ணவர்கள் போன்று, தாமும்
[4]கீர்த்திவந்(து) அணுகாது [5]மூன்பட்ட [6]பாடும்,[7]உயர்
கேடும் [8]கிளக்க உறல்போல,
கிளர்செழும் கதிர்மணிக் குழைகள்ஒன் றேடொன்று
கிட்டிக் ; [9]கெழீஇ மகிழ்ச்சி,
பூர்த்திவந்(து) [10]அன்பின் கலந்தெனத் தொட,இரு
புறத்துநின் திருமுகத்தைப்
[11]பொற்புற அசைத்தசைத்(து,) அற்புத மிகந் தாயர்
பூரித்(து,) உளம்க ளிப்பச் ;
[12]சீர்த்திவந்(து) அமர்பெரும் தேவர்சே னதிபதி
செங்கீரை ஆடி யருளே !
சிற்பரம் பொருளருளும் நற்பரங் கிரிமுருக !
செங்கீரை யாடி யருளே !

(1) பார்த்திவம்தனில் - நிலவுலகில். (2) பெரும் பரிதி என - பெருமையை யுடைய ஞான சூரியன் என்று. (3) கதிர்க் கடவுள் பண்ணவர்கள் போன்று - சூரியர் களாகிய தேவர்கள் போன்று. (4) கீர்த்தி வந்து அணு

காது - (வாழ் நாள் முழுதும்) புகழ் வந்து அணுகாதபடி. (5) முன் - முன்னுளில். (6) பட்டபாடும் - (சூரபதுமன், இரணியன், இராவணன் முதலியோரால்) பட்ட வேதனை யும். (7) உயர் கேடும் - பெரும் கேட்டையும். (8) கிளக்க உறல்போல் - விண்ணப்பிக்க வந்ததைப்போல. (9) கெழீஇ மகிழ்ச்சி பூர்த்தி வந்து—மகிழ்ச்சி மிகுந்து நிறைந்து வந்து. (10) அன்பின் கலந்தெனத் தொட - அன்பில் கலந் தது போல் (தாயர்) தொட. (11) பொற்பு உற - பொலிவு தோன்ற. (12) சீர்த்தி வந்து - (இத்தகைய செய்திகளால்) சிறப்பு வெளிப்படத் தோற்றி. (3)

15. ஓங்குமறை[1] உள்ளூறும் பிரணவக் கனிபழுத்து
ஒண்பொருள் [2]செம்சு வைத்தாய்;
ஊற்றிருந்து ஊறிப், பெருக்கெழீஇ வழிதல்போல்,
ஒழுகுவாய் [3]ஊறல்அமுதம்
தாங்குபொன் [4]வரைமார்பில், உபநயன விதிமுறை
சடங்குசெய் யாது,தானே
தங்கத் தரித்திடும் [5]தவளஉப வீதம்[6]இது
தான்எனத், தக்க சீரோ(டு,)
[7]ஏம்குலவு மழலைமொழி, குழலினிது யாழினிது
எனும்குறட்கு ஓர் இலக்கா:
எம்பிரா னே(டு)எம் பிராட்டியும் கண்டு மகிழ்வு
எய்திஇறு மாந்திருப்பத்,
தேங்குமதி முகநிமிர்த்து ஒருசேய் இளம்களிறு
செங்கீரை யாடி யருளே!
சிற்பரம் பொருளருளும் நற்பரங் கிரிமுருக!
செங்கீரை யாடி யருளே!

(1) மறை உள்ளூறும் - வேதக் கருவில் விளைந்த. (2) செம் சுவைத்தாய் - செம்மைச் சுவை யுடையதாய். (3) வாய் ஊறல் அமுதம் - திருவாயில் பிறந்த நீரான

அமுதமானது. (4) வரை - மலை போன்ற. (5) தவள உபவீதம் - (முத்துப்போல்) வெண்மையான முந்நூல். வாயூறிய நீர் மார்பில் ஒழுகல், முத்துப் பூணூல்போல் தோன்ற எனும் நயம் இங்கு எண்ணத் தகும். (6) இதுதான் எனத்தக்க சிரோடு - இதுதான் என்று சொல்லத் தக்க சிறப்புடன். (7) ஏமம் என்பது, எதுகை நோக்கி ஏம் என நின்றது. ஏமம் - இன்பம். (4)

16. [1]பொன்மய வரைக்கண் முளைத்தெழும் [2]பச்சிளம்
பொருவில் கொடி, [3]ஒருமருந்(து)இல்
புலவியில், [4]தனதுஅம் புயங்களில் [5]அலர்த்தும்[6]அம்
புயமலர்களும், புதுப்பொன்[7]
னின்மய நிறச்சிறிய அரவிந்தம் ஒன்(று,)[8]அரை
யில்பாதி, [9]இப்பா தியி
னிற்பாதி மலர்தரத், [10]தத்தமக்கு உற்றவாறு
[11]இனிதுபூத் திடுதல் ஏய்ப்பத்,
[12]தன்மயம் நிலைக்கும் [13]செழும்பவள மலையினில்
[14]தன்னடிச் சுவடு தங்கத்,
தான்மிதித்து ஏறிக், [15]களிகூர விளையாடு
சரவணத் தினில் சனித்த
சின்மலை சொருபமு இருமுகத்து இளமதலை
செங்கீரை யாடி யருளே!
சிற்பரம் பொருளருளும் நல்பரங் கிரிமுருக!
செங்கீரை யாடி யருளே!

(1) பொன் மய வரைக்கண் – இமய மலையில். (2) பச்சிளம் பொருவில் கொடி - பசுமையும் இளமையும் உடைய ஒப்பிலாத பூங்கொடியான உமாதேவி. (3) ஒரு மருந்து இல் புலவியில் - (எந்த) ஒரு பரிகாரமும் இல்லாத ஊடலில். (4) தனது அம்புயங்களில் - சிவனரது அழகிய திருத்தோள் களில். (5) அலர்த்தும் - விளங்கச் செய்யும். (6) அம்புய

மலர்களும் - திருவடி மலர்களால் ஆன சுவடுகளும். (7) பொன்னின் மய நிறச் சிறிய அரவிந்தம் ஒன்று - பொன் மயமான வண்ணத்தை யுடைய திருவடி ஒன்று. (8) அரையில் பாதி - கால் பகுதியும். (9) இப் பாதியினில் பாதி - இந்தக் காலில் பாதியான அரைக்கால் பகுதி யுமாக. (10) தத்தமக்கு உற்றவாறு - தத்தமக்கு ஏற்ற வண்ணம். (11) இனிது பூத்திடுதல் ஏய்ப்ப - இனிது மலர் தலைப் போல. (12) தன்மய நிலைக்கும் - எங்கும் தன் மயமாக நிலை பெற்றிருக்கும். (13) செழும் பவள மலையி னில் - செழுமையான பவள மலைபோன்ற சிவத்தின் இடத் தில். (14) தன் அடிச்சுவடு தங்க - தன் திருவடிகளின் அடையாளம் தங்கும்படியாக. (15) களி கூர - (அச் சிவ பிரான்) உள்ளம் களி மிகும்படி.

ஊடல் கொண்டதேவி, சிவனார் திருத்தோள்களில் திருவடி அடையாளமிட, சுவடு தங்கிய அதே புயங்களில், அரைப் பாதமும், கால் பாதமுமான அடையாளம் அமையக், கண்டபடி மிதித்து ஏறிச் சிவம் மகிழ விளையாடுகின்ற வனும், ஞான சொரூபனும், அறுமுகனுமான முருகா! செங்கீரை யாடியருள் என்றபடி. (5)

வேறு சந்தம்

17. [1]உரகரும், மனிதரும், அமரரும் அன்பின்
[2]உவந்து பணிந்தாரேல்,
உறுநமன் [3]உரமற எதிர்[4]பொருது, [5]உந்தையின்
[6]உந்தி உதைந்தாடி;
[7]வர(வு)[8]அதி விரைவின் எழுந்து பயின்றிட
வந்த விதம்போல,
வளர்ஒளி [9]மணிகிளர் [10]பொன்செயும் அம்சிறு
[11]மஞ்சம் மகிழ்ந்தேறி

விரவிய [12]அமளி கிடந்து, சதங்கை
[13]மிளிர்ந்திடு நின்தாளின்
மெல்ல உதைந்து, அமுது ஊறு பெரும்விரல்
மென்சுவை [14]உண்டாடும்
அரன்அருள் ஒருமகன், அரிதிரு மருமகன்
ஆடுக செங்கீரை !
அறம்குறை யாத பரங்கிரி வேலவன்
ஆடுக செங்கீரை !

(1) உரகரும் - நாகரும். (2) உவந்து — மகிழ்ந்து. (3) உரம் அற - வலி கெட. (4) பொருது - மோதுகிற. (5) உந்தையின் - உமது பிதாவான சிவனுரைப்போல். (6) உந்தி உதைந்து ஆடி - முன்னும் பின்னுமாக (த் திருவடி) உதைத்து விளையாடி. (7) வரவு - (அன்பர்க்கு அருள) வருகை கருதி. (8) அதி விரைவின் - மிக்க வேகத்துடன். (9) மணிகிளர் - நவமணி மிகப் பதித்து. (10) பொன் செயும் - பொன்னுல் செய்த. (11) மஞ்சம் - தொட்டில். (12) அமளி - படுக்கை. (13) மிளிர்ந்திடு - மிக்கு ஒளிரும். (14) உண்டு ஆடும் - பருகி விளையாடுகின்ற. (6)

18. [1]விட்டில(கு) அம்பொன் மணிப்[2]பணி சிரம்,[3]உரம்,
மார்புமென் செவி,அரை, கை,கால்
மீது[4]புனைந்தவர் [5]விட்டிடு விழிகளை
[6]மென்மணி [7]பலபைங்கார்ப்
பட்டில் இசைந்த குறுந்தொடர் ஊடு
பதித்தொரு நான்அணியும்
[8]பரிசென நீர்நுண் [9]துளிவிழி [10]யிமைமயிர்
பயில அரும்பி மலர்த்
தொட்டிலின் [11]உந்தி எழீஇமென் குரலிசை
சுவைதர விளையாடுந்